# மயிலாடுதுறை நகராட்சி

குறள்: அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

பொருள்: இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடையதாக விளங்குமானால் அந்த வாழ்க்கையில் பண்பும் பயனும் அதுவே ஆகும்.

கூட்ட எண்: 18/2022

நகராட்சி அலுவலகம்
மயிலாடுதுறை

நாள்: 16.05.2023

## சாதாரணக்கூட்டம்

அன்புடையீர்!

பொருள்: கூட்டம் – மயிலாடுதுறை நகராட்சி – சாதாரணக்கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

*****

மயிலாடுதுறை நகர்மன்ற சாதாரணக்கூட்டம் 2023–ஆம் ஆண்டு மே மாதம் 19.05.2023–ந்தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நகர்மன்றத்தலைவர் தலைமையில் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நகர்மன்ற கூட்டரங்கில் நடைபெறும் சாதாரணக்கூட்டத்திற்கு தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் அன்பார்ந்த

(நா. செல்வராஜ்)
நகர்மன்றத் தலைவர்,
மயிலாடுதுறை நகராட்சி.

**2023 – மார்ச் மாதம் நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள்கள்**

**1)** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள கடைகளுக்கான தொழில்வரி விதிப்பு கேட்பில் உள்ளவைகளில் இரட்டை கேட்பிற்கான வரிவிதிப்புகள் மற்றும் இடிந்த நிலையில் உள்ள கடைகள், வேறு இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட கடைகள், காலி செய்யப்பட்ட வரிவிதிப்புக்களின் தொழில்வரி விதிப்பு கேட்புகளை நீக்கம் செய்திட வருவாய் உதவியாளர், வருவாய் ஆய்வர்(சிறப்பு) மற்றும் வருவாய் ஆய்வர் ஆகியோர்களால் களஆய்வு செய்யப்பட்டதில், மேற்படி நாளது தேதிவரை (3,5,17,18,19,20,21,23,25,29,28,34,) வார்டு பட்டியலில் குறிப்பிட்டுள்ள தொழில்வரி விதிப்புகளிள் உள்ள கேட்புகளை வசூல் செய்ய எவ்வித வழிவகையும் இல்லை என வருவாய் உதவியாளர், வருவாய் ஆய்வர்(சிறப்பு) மற்றும் வருவாய் ஆய்வர் ஆகியோர்களால் தெழில்வரி விதிப்புகளை நீக்கம் செய்திட வார்டு வாரியாக பட்டியல் தயார் செய்து சான்று வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட சான்றின் அடிப்படையில் நீக்கம் செய்ய வேண்டியத் தொழில்வரி விதிப்புகளின் எண்ணிக்கை 102 ஆகும். மேற்படித் தொழில்வரி நீக்கம் செய்ய வேண்டிய கூடுதல் தொகை ரூ.4,68,721/-யை நீக்கம் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:653/2023/அ6**

**மன்றத் தீர்மானம் எண். 450 நாள்: 19.05.2023**

**அலுவலக குறிப்பு: ஒத்திவைக்கப்பட்டது.**

2) இந்நகராட்சிக்கு உட்பட்ட 36 வார்டுகளில் சொத்துவரிவிதிப்பு செய்யும் பொழுது ஏற்கனவே விதிக்கப்பட்ட காலிமனை வரியை நீக்கம் செய்யாமல் சொத்து வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு நீக்கம் செய்யவேண்டிய காலிமனை வரி இனங்களை நீக்கம் செய்திட வருவாய் உதவியாளர், வருவாய் ஆய்வர், வருவாய் ஆய்வர்(சிறப்பு) ஆகியோரால் கள ஆய்வு செய்யப்பட்டதில் மேற்படி இடங்களில் கட்டிடம் கட்டப்பட்டு சொத்துவரிவிதிப்பு செய்யப்பட்டு நாளது தேதிவரை சொத்துவரி வசூல் செய்யப்பட்டு வருவதாகவும் ஏற்கனவே உள்ள காலிமனை வரிவிதிப்புகள் நீக்கம் செய்யப்படாமல் நீண்ட நாட்கள் நிலுவையாக உள்ளது எனவும் மேற்படி சொத்துவரிவிதிப்பு செய்யப்பட்ட அரையாண்டிலிருந்து காலிமனை வரிவிதிப்புகளை நீக்கம் செய்திட வார்டு வாரியாக பட்டியல் தயார் செய்து வருவாய் உதவியாளர், வருவாய் ஆய்வர், வருவாய் ஆய்வர்(சிறப்பு) மற்றும் வருவாய் அலுவலர் ஆகியோரால் சான்று வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட சான்றின் அடிப்படையில் நீக்கம் செய்யவேண்டிய காலிமனை வரிவிதிப்புகளின் கேட்புத் தொகை ரூ. 33,03,284/-யை நீக்கம் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** காலிமனை வரியை நீக்கம் செய்யாமல் புதிய வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே காலிமனை வரி கேட்பினை நீக்கம் செய்ய வருவாய் உதவியாளர், உதவியாளர், வருவாய் ஆய்வர், வருவாய் ஆய்வர்(சிறப்பு) மற்றும் வருவாய் அலுவலர் ஆகியோரால் சான்று வழங்கப்பட்டுள்ளது. எனவே காலிமனை வரி கேட்பினை நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 4987/2021/அ1**

**மன்றத் தீர்மானம் எண். 451 நாள்: 19.05.2023**

**அலுவலக குறிப்பு: ஒத்திவைக்கப்பட்டது.**

**3)** இந்நகராட்சிக்கு உட்பட்ட 36 வார்டுகளில் சொத்து வரிவிதிப்பு செய்யும் பொழுது ஏற்கனவே விதிக்கப்பட்ட பழைய சொத்து வரியை நீக்கம் செய்யாமல் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தவறுதலாக எழுப்பப்பட்டுள்ள சொத்து வரிவிதிப்பு இனங்களை நீக்கம் செய்திட வருவாய் தவியாளர், வருவாய் ஆய்வர், வருவாய் ஆய்வர்(சிறப்பு) ஆகியோரால் கள ஆய்வு செய்யப்பட்டதில் பழைய வீட்டை இடித்துவிட்டு புதிய கட்டிடம் கட்டப்பட்டு சொத்து வரிவிதிப்பு செய்யப்பட்டு புதிய சொத்துவரி வசூல் செய்யப்பட்டு வருவதாகவும் ஏற்கனவே உள்ள பழைய சொத்து வரிவிதிப்பு நீக்கம் செய்யாமல் நீண்ட நாட்கள் நிலுவையாக உள்ளது எனவும் புதிய சொத்து வரிவிதிப்பு செய்யப்பட்டதால் பழைய வரிவிதிப்புளை வசூல் செய்ய எவ்வித வழிவகையும் இல்லை என வருவாய் உதவியாளர், வருவாய் ஆய்வர், வருவாய் ஆய்வர்(சிறப்பு) மற்றும் வருவாய் அலுவலர் ஆகியோரால் பழைய சொத்து வரிவதிப்புகளை நீக்கம் செய்திட வார்டு வாரியாக பட்டியல் தயார் செய்து சான்று வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட சான்றின் அடிப்படையில் நீக்கம் செய்ய வேண்டிய சொத்து வரிவிதிப்புகளின் கேட்புத் தொகை ரூ.1910844 /-யை நீக்கம் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பழைய சொத்து வரியை நீக்கம் செய்யாமல் புதிய வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே பழைய சொத்து வரி கேட்பினை நீக்கம் செய்ய வருவாய் உதவியாளர், வருவாய் ஆய்வர், வருவாய் ஆய்வர்(சிறப்பு) மற்றும் வருவாய் அலுவலர் ஆகியோரால் சான்று வழங்கப்பட்டுள்ளது. எனவே சொத்து வரி கேட்பினை நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 4987/2021/அ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 452 நாள்: 19.05.2023</u>**

**அலுவலக குறிப்பு: ஒத்திவைக்கப்பட்டது.**

## <u>புதிய பொருள்கள்</u>

**1)** நகராட்சி ஆணையர், பொறியாளர், நகர்நல அலுவலர் மற்றும் நகரமைப்பு அலுவலர் ஆகியோர்களின் ஏப்ரல் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்து ஒப்புதல் வழங்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண். 453 நாள்: 19.05.2023</u>**

**அலுவலக குறிப்பு: பதிவு செய்து ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**2)** மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.2–ல் உள்ள பெருமாள்கோவில் வாசல் பகுதியில் உள்ள பொதுமக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்யும் விதமாக அப்பகுதியில் ஆழ்துளை கிணறு அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத்தொகை 4.30 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்டத்திலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.1627/2023/இ1**
**<u>மன்றத் தீர்மானம் எண். 454 நாள்: 19.05.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**3)** மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் மற்றும் நகரமன்றத்தலைவர் அவர்களின் **26.03.2023** –ஆம் தேதிய கள ஆய்வில் மகாதானத்தெரு மற்றும் பட்டமங்களத் தெருவில் கழிவு நீர் வழிந்தோடுவதை தடுத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டதின்படி இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீர் உந்துநிலையம் எண்.8ஏ முதல் கழிவு நீர் உந்து நிலையம் 8 வரை புதியதாக 8" PVC குழாய் அமைத்திட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.27.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.1629/2023/இ1**

**மன்றத் தீர்மானம் எண். 455 நாள்: 19.05.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**4)** மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் மற்றும் நகரமன்றத்தலைவர் அவர்களின் **26.03.2023** –ஆம் தேதிய கள ஆய்வில் மகாதானத்தெரு மற்றும் பட்டமங்களத் தெருவில் கழிவு நீர் வழிந்தோடுவதை தடுத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டதின்படி காவேரி ஆறு பாலக்கரை முதல் கழிவு நீர் உந்து நிலையம் எண்..8ஏ வரை புதியதாக 8" PVC குழாய் அமைத்திட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.27.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.1630/2023/இ1**

**மன்றத் தீர்மானம் எண். 456 நாள்: 19.05.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**5)** மயிலாடுதுறை நகராட்சியில் அலுவலகப்பணி நிமித்தமாக வெளியூர் சென்று வரும் பணியாளர்களுக்கு பயணப்படி 2023–2024–ம் ஆண்டிற்கு வழங்கவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.230/2017/பி2**

**மன்றத் தீர்மானம் எண். 457 நாள்: 19.05.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**6)** மயிலாடுதுறை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு, பள்ளி கல்வி துறை நகராட்சியால் அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் ஆகஸ்டு 2022 முதல் ஜனவரி 2023 வரை தூய்மைப்பணி பார்க்கப்பட்டு வந்தது. மீண்டும் பள்ளிகளில் தூய்மைப்பணி பார்ப்பதற்கு ஏதுவாக பழைய அளவுகோலின்படி மீண்டும் 15 தூய்மை பணியார்களை பணி அமர்த்திக்கொள்ளவும், மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி அடிப்படையில் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு ரூ. 420/– வீதம் பிப்ரவரி 2023 முதல் ஏப்ரல் 2023 வரை 3 மாதங்களுக்கான உத்தேச செலவினம் ரூ.5,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசரம் அவசியம் கருதி மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு 15 தூய்மைப்பணியாளர்களை பணியில் அமர்த்திக்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண்.3113/2022/எச்2**

**மன்றத் தீர்மானம் எண். 458 நாள்: 19.05.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**7)** இந்நகராட்சியில் 2022–2023–ஆம் நிதியாண்டிற்கு அலுவலக உபயோகத்திற்கு தேவையான கணினி உபகரணங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனங்களிடம் கொள்முதல் செய்ய விலைப்புள்ளி கோரவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.4,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 645/2023/டி3**
**<u>மன்றத் தீர்மானம் எண். 459 நாள்: 19.05.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**8)** மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண் 28–இல் இரயில் நிலையம் அருகில் உள்ள மீன்மார்க்கெட்டினை பழுது நீக்கம் செய்யவும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத்தொகை ரூ.17.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2023–2024 திட்டப்பணிகளில் வழிவகை செய்து பணியினை மேற்கொள்ளலாம்.

**ந.க.எண்.1628/2023/இ1**
**<u>மன்றத் தீர்மானம் எண். 460 நாள்: 19.05.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கப்பட்டது.**

**9)** மயிலாடுதுறை நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள உட்புற UBSP கடைக்கு மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி 11.11.2022, 13.12.2022, 20.01.2023 மற்றும் 10.03.2023 ஆகிய நான்கு முறைகள் நடைபெற்றதில் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வரவில்லை. மேலும் 19.04.2023 அன்று 5வது முறையாக மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் கீழ் குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ.எண். | பெயர் / முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை (ஒருமாத வாடகை) |
|---|---|---|
| 1 | திரு. P. பாலன்,<br>35. மாப்படுகை ரோடு,<br>மயிலாடுதுறை. | ரூ.15,000/– |
| 2 | திரு. K. கல்யாணராமன்,<br>ஈ.வே.ரா. தெரு,<br>கூறைநாடு,<br>மயிலாடுதுறை. | ரூ.9,000/– |

மேற்படி, இந்த இனத்தினை துறை மூலம் வசூல் செய்ய இயலாத நிலையில் உள்ளதாலும், நான்கு முறை மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் எவரும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர வராததாலும், ஐந்தாவது முறையாக வரிசை எண்.1. குறிப்பிடப்பட்டுள்ள திரு. P. பாலன், என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை இதற்குமுன் உள்ள வாடகை தொகையைவிட குறைவாக உள்ளதாலும், நகராட்சியின் நிதியிழப்பு ஏற்படாவண்ணம் இருக்க மேற்குறிப்பிட்ட உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையினை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் முடிவு செய்யலாம்.

**ந.க.எண்.4827/2020/அ2**
**<u>மன்றத் தீர்மானம் எண். 461 நாள்: 19.05.2023</u>**

**அலுவலக குறிப்பு: உயந்தப்பட்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. P. பாலன் நெ.35. மாப்படுகை ரோடு என்பவரிடம் கடையை வாடகைக்கு ஒப்படைப்பதற்கு அனுமதிக்கலாம்.**

**10)** இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.**16**, பட்டமங்கலத்தெரு, பழைய சொத்துவரி விதிப்பு எண்.**097/016/900085–**ல்உள்ள இடத்தை இடித்து விட்டு புதியதாக தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்துடன் கூடிய RCC கட்டிடம் வணிக பயன்பாடாக கட்டப்பட்டு திரு. M. முகமது பாரூக் , என்பவர் பெயரில் புதியதாக ஒரே வரிவிதிப்பாக **01.10.2022** முதல் சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி, வரிவிதிப்புதாரர் திரு. M. முகமது பாரூக் என்பவரின் **05.04.2023**ம் தேதிய மனுவின்படி மேற்படி இடத்திற்கு ஒரே வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும் அதனை மறு ஆய்வு செய்து தனித்தனியாக தரைத்தளம், முதல்தளம் மற்றும் இரண்டாம்தளமாக வரிவிதிப்பு செய்யக் கோரப்பட்டதின்படி மேற்படி இடத்திற்கு மூன்று வரிவிதிப்பாக தனித்தனியாக **01.10.2022** முதல் முன்தேதியிட்டு வணிகப் பயன்பாட்டின்படி வரி மாற்றியமைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி இடத்திற்கு ஒரே வரிவிதிப்பாக செய்யப்பட்டுள்ள சொத்துவரி விதிப்பு எண். **097/016/902547** தொகை ரூ.**87516/–**யை நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 01707/2023/அ1**

**மன்றத் தீர்மானம் எண். 462 நாள்: 19.05.2023**

**அலுவலக குறிப்பு:**

**11)** இந்நகராட்சி வார்டு எண்.**34–**ல் உள்ள பட்டமங்கல புதுத்தெரு, ஸ்ரீநகர் காலனி ZONE- A-யில் உள்ளது. அதனை ZONE-C–ற்கு மாற்றம் செய்யக் கோரி திரு.இரா.கார்த்திக், **34–**வது வார்டு நகர்மன்ற உறுப்பினரால் கொடுக்கப்பட்ட தீர்மான எண்.**309**, நாள்:**30.11.2022** ல் நிறைவேற்றப்பட்டுள்ளது. வருவாய் உதவியாளர், வருவாய் ஆய்வாளர் (சிறப்பு) மற்றும் வருவாய் அலுவலரால் மேற்படி இடத்தினை ஆய்வு செய்து குறிப்பு அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, பிரதான சாலையில் இருந்து உள்ளே இரண்டு தெருக்கள் கடந்து பட்டமங்கல புதுத்தெரு ஸ்ரீநகர் காலனி அமைந்துள்ளது என்றும், அதற்கு மட்டும் A மண்டலத்தில் சொத்துவரி விதிப்பு உள்ளது என்றும், அதனை சுற்றியுள்ள சாலையின் மற்ற தெருக்கள் B மற்றும் C மண்டலத்தில் அமைந்துள்ளது என்றும் பிரதான சாலையில் பட்டமங்கல புதுத்தெரு ஸ்ரீநகர் காலனி அமையவில்லை என்பதாலும் தற்போது பட்டமங்கல புதுதெரு ஸ்ரீநகர் காலனி மட்டும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று மண்டலம் A–யில் உள்ளதை மண்டலம் C–ற்கு மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 4980 /2022/அ1**

**மன்றத் தீர்மானம் எண். 463, நாள்: 19.05.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**12)** மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் அறை மற்றும் மேலாளர் அறையில் பொருத்தப்பட்டுள்ள A.C பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் இவற்றினை புதியதாக மாற்றிடவும் மற்றும் இவ்வலவலக முதல் தளத்தில் உள்ள நகராட்சி பொறியாளர் அறை, நகர்நல அலுவலர் அறை, வருவாய் அலுவலர் அறை, உதவிப்பொறியாளர் அறை மற்றும் கணிணி அறையில் புதியதாக A.C சாதனங்கள் மற்றும் தேவையான இடங்களில் Aluminioum Partician அமைத்திட தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச செலவீனம் ரூ.**9.90** இலட்சம் ஆகும், இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசிம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண் : 2190 / 2023 / இ1.**

**மன்றத் தீர்மானம் எண். 464 நாள்: 19.05.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**13)** மயிலாடுதுறை நகராட்சி பொது நிதியின் கீழ் திடக்கழிவு மேலாண்மை செயலாக்க பணிகளை தனியார் வெளிக்குநர்வு முகமை மூலம் செயல்படுத்த சேவை வழங்குநர்/முகவர்/ஒப்பந்தக்காரர் தேர்வு செய்திட மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில தினசரிகளில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசூரம் செய்ய பட்டமைக்கான பட்டியல் தொகை ரூ.**1,15,185/-**ஐ வழங்கிட கோரி M/S.Vibras adz, Chennai நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.

எனவே, மேற்படி பட்டியல் தொகை ரூ.**1,15,185/-**ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து M/S.Vibras adz, Chennai நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 4626 / 2022 / எச்1**

**மன்றத் தீர்மானம் எண். 465 நாள்: 19.05.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**14) மயிலாடுதுறை நகராட்சிப் பகுதிகளில் முதற்கட்டமாக கீழ் கண்ட 17 எண்ணிக்கையிலான பழுதான தார்சாலைகள் 3.389 கி.மீ நீளத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளன, இவற்றினை சீர் செய்திட தயார் செய்யப்பட்டள்ள திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.110.00 இலட்சம் ஆகும்.**

| வ. எண் | Unicode No. | சாலையின் விபரம் | சாலையின் நீளம் (மீ) | சாலையின் அகலம் (மீ) | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| 1 | 097002R014 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.2இல் உள்ள திருவிழந்துார் சன்னதி தெரு தார் சாலையினை சீரமைக்கும் பணி. | 165.00 | 4.00 | |
| 2 | 097003R035 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.3இல் உள்ள திருவிழந்துார் முதல் வடக்குத் தெரு தார் சாலையினை சீரமைக்கும் பணி. | 210.00 | 4.00 | |
| 3 | 097005R084 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.5இல் உள்ள வள்ளலார் இரட்டைத் தெரு தார் சாலையினை சீரமைக்கும் பணி. | 177.00 | 4.00 | |
| 4 | 097014R337 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.14இல் உள்ள சின்ன பள்ளி வாசல் தெரு தார் சாலையினை சீரமைக்கும் பணி. | 182.00 | 4.10 | 34 |
| 5 | 097018R471 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.18இல் உள்ள வடக்கு அரண்மனைத் தெரு தார் சாலையினை சீரமைக்கும் பணி. | 70.00 | 3.00 | |
| 6 | 097021R490 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.21இல் உள்ள நாஞ்சில் நாடு முதல் தெரு தார் சாலையினை சீரமைக்கும் பணி. | 103.00 | 4.00 | |
| 7 | 097022R485 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.22இல் உள்ள தெற்கு அரண்மனைத் தெரு தெரு தார் சாலையினை சீரமைக்கும் பணி. | 185.00 | 4.00 | |
| 8 | 097021R503 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.21இல் உள்ள சரோஜினி நகர் தார் சாலையினை சீரமைக்கும் பணி. | 110.00 | 4.00 | 10.00 |
| 9 | 097021R504 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.21இல் உள்ள சரோஜினி நகர் தார் சாலையினை சீரமைக்கும் பணி. | 200.00 | 4.00 | |
| 10 | 097025R367 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.25இல் உள்ள ரேவதி நகர் 3வது தெரு தா ர் சாலையினை சீரமைக்கும் பணி. | 250.00 | 4.10 | 26.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | 097027R301 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.27இல் உள்ள கூறைநாடு குமரக்கட்டளைத் தெரு தார் சாலையினை சீரமைக்கும் பணி. | 338.00 | 4.10 | |
| 12 | 097030R252 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.30இல் உள்ள துாக்கனாங்குளம் மேல்கரை தார் சாலையினை சீரமைக்கும் பணி. | 200.00 | 4.00 | |
| 13 | 097031R281 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.31இல் உள்ள கொண்டாரப்பர் தெரு தார் சாலையினை சீரமைக்கும் பணி. | 474.00 | 4.10 | 40.00 |
| 14 | 097032R305 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.32இல் உள்ள ஜவுளி செட்டித் தெரு தார் சாலையினை சீரமைக்கும் பணி. | 237.00 | 4.10 | |
| 15 | 097033S030 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.33இல் உள்ள செம்மங்குளம் தென்கரை தார் சாலையினை சீரமைக்கும் பணி. | 179.00 | 4.00 | |
| 16 | 097034R378 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.34இல் உள்ள பட்டமங்கலத் புதுத் தெரு 3வது மெயின் ரோடு தார் சாலையினை சீரமைக்கும் பணி. | 185.00 | 4.10 | |
| 17 | 097035R388 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.35இல் உள்ள சுப்பிரமணியபுரம் 3வது மெயின் ரோடு தார் சாலையினை சீரமைக்கும் பணி. | 124.00 | 4.10 | |
| | கூடுதல் | | 3389.00 | | 110.00 |

மேற்கண்ட விபரப்படி உள்ள 17 எண்ணிக்கையிலான பழுதான தார்சாலைகளை சீரமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.110.00 இலட்சத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்,

**ந.க.எண் : 1061/2023/எச்1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 466 நாள்: 19.05.2023</u>**

**அலுவலக குறிப்பு: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**15)** மயிலாடுதுறை நகராட்சி பொது நிதியின் கீழ் திடக்கழிவு மேலாண்மை செயலாக்க பணிகளை தனியார் வெளிக்குநர்வு முகமை மூலம் செயல்படுத்த சேவை வழங்குநர்/முகவர்/ஒப்பந்தக்காரர் தேர்வு செய்திட மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில தினசரிகளில் மறுஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசூரம் செய்ய பட்டமைக்கான பட்டியல் தொகை ரூ.65,678/-ஐ வழங்கிட கோரி M/S. Graphic Connections Advertising (MADRAS) Pvt. Ltd., Chennai நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.

எனவே, மேற்படி பட்டியல் தொகை ரூ.65,678/-ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து M/S. Graphic Connections Advertising (MADRAS) Pvt. Ltd.,Chennai நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 4626 / 2022 / எச்1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 467 நாள்: 19.05.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**16)** மயிலாடுதுறை நகராட்சி 15வது நிதிக்குழு நிதிக்குழு மானியம் 2022–2023 (Tied Grant) திட்டத்தின்கீழ் இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை செயலாக்க பணிகளை மேம்படுத்திட தேவையான 10 எண்ணிக்கை LCV வாகனங்கள் மற்றும் 4 எண்ணிக்கை BOV வாகனங்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில தினசரிகளில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசூரம் செய்ய பட்டமைக்கான பட்டியல் தொகை ரூ.65,678/-ஐ வழங்கிட கோரி M/S. Graphic Connections Advertising (MADRAS) Pvt. Ltd., Chennai நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.

எனவே, மேற்படி பட்டியல் தொகை ரூ.65,678/-ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து M/S. Graphic Connections Advertising (MADRAS) Pvt. Ltd.,Chennai நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 1655 / 2023 / இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 468 நாள்: 19.05.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**17)** மயிலாடுதுறை நகராட்சி 15வது நிதிக்குழு நிதிக்குழு மானியம் 2022–2023 (Untied Grant) திட்டத்தின்கீழ் இந்நகராட்சி பகுதியில் பழுதடைந்துள்ள தார்சாலைகளை சீரமைக்கும் பணி மேற்கொள்ள மாவட்ட அளவில் தமிழ் தினசரிகளில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசூரம் செய்ய பட்டமைக்கான பட்டியல் தொகை ரூ.16910/-ஐ வழங்கிட கோரி மாலைத் தமிழகம் நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.

எனவே, மேற்படி பட்டியல் தொகை ரூ.16910/-ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மாலைத் தமிழகம் நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 1278 / 2023 / இ1.**

**<u>மன்றத் தீர்மானம் எண். 469 நாள்: 19.05.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**18)** மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் கும்பகோணம் சாலையில் தலைமை அஞ்சல் நிலையம் முதல் ரயில்வே மேம்பாலம் வரை அமைக்கப்பட்டுள்ள பிரதான கழிவு நீர் குழாயில் ஏற்பட்டுள்ள அடைப்பின் காரணமாக கழிவு நீர் முழுமையாக வெியேற்ற முடியாமல் உள்ளது, இதனால் அருகில் உள்ள தெருக்களில் அமைக்கப்பட்டுள்ள ஆள்நுழைவு தொட்டி வழியாக பல்வேறு இடங்களில் சாலையில் கழிவு நீர் வழிகின்றது. இதனை உடனுக்குடன் அப்புறப்படுத்தி நகர சுகாதாரத்தை திருப்திகரமான முறையில் பராமரித்திட கூடுதலாக இரண்டு கழிவு நீர் வாகனம் வாடகை அடிப்படையில் அமர்தி சாலையில் வழியும் கழிவு நீரினை அப்புறப்படுத்தும் பணியினை( மே–2023 ஒருமாத காலத்திற்கு) உள்ளூர் விலைப்புள்ளி கோரி குறைந்த விளைப்புள்ளியின் அடிப்படையில் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவீனம் ரூ.2.48 இலட்சம் ஆகும், இச்செலவீனத்தை இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின்முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண் : / 2022 / இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 470 நாள்: 19.05.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**19)** இந்நகராட்சியில் அலுவலக உபயோகத்திற்கு தேவையான கணினி உபகரணங்கள் பழுதுபார்க்க 25.04.2023 –ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டத்தில் அவசரம் அவசியம் கருதி கீழ்கண்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து இரண்டு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனங்களின் பெயர் | கணினி SMPS Unit 2 Nos | மொத்த தொகை |
|---|---|---|---|
| 1 | Com Care Service. Mayiladuthurai | 1250/- | 2500/- |
| 2 | Intech Computer Services. Mayiladuthurai | 1350/- | 2700/- |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு நிறுவனத்தின் விலைப் புள்ளிகளில் வரிசை எண்.1–ல் உள்ள Com Care Service. Mayiladuthurai நிறுவனம் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால், Com Care Service. Mayiladuthurai நிறுவனத்திற்கு விநியோக ஆணை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.1688/2020/டி2**

**<u>மன்றத் தீர்மானம் எண். 471 நாள்: 19.05.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**20)** இந்நகராட்சியில் அலுவலக உபயோகத்திற்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள் மற்றும் எழுது பொருட்கள் கொள்முதல் செய்ய கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து 23.03.2023–ம் தேதிய விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டுள்ள இரண்டு கூட்டுறவு நிறுவனங்களிடம் விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| **வ.எண்** | **நிறுவனங்களின் பெயர்** | **மொத்த தொகை (ரூபாய்)** |
|---|---|---|
| **1** | தஞ்சாவூர் மாவட்ட அச்சக சேவை கூட்டுறவு நிறுவனம் – தஞ்சாவூர் (வ.எண். 1 முதல் 33 வரை 1 பொருளுக்கான மொத்த விலை) | ரூ. 24455/- |
| **2** | மயிலாடுதுறை மாவட்ட அச்சக சேவை கூட்டுறவு நிறுவனங்கள், மயிலாடுதுறை. (வ.எண். 1 முதல் 33 வரை 1 பொருளுக்கான மொத்த விலை) | ரூ. 22691/- |

மேற்படி, குறிப்பிட்டுள்ள இரண்டு நிறுவனத்தின் விலைப்புள்ளிகளின் வரிசை எண்.2–ல் உள்ள மயிலாடுதுறை மாவட்ட அச்சக சேவைத்தொழில் கூட்டுறவு நிறுவனம், மயிலாடுதுறை அவர்களின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால், மயிலாடுதுறை மாவட்ட அச்சக சேவை தொழில் கூட்டுறவு நிறுவனம் மயிலாடுதுறை, விநியோக ஆணை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.5609/202/டி2**

**<u>மன்றத் தீர்மானம் எண். 472 நாள்: 19.05.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

21) நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் அரசாணை எண்.G.O.(D) No.192, நாள் : 31.03.2023 இல். இந்நகராட்சிப் பகுதிகளில் பழுதான தார்சாலைகளை சீரமைப்பதற்கு ரூ.168.00 இலட்சத்திற்கு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (NSMT)–2022–2023ன் கீழ் சீரமைக்கும் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி மயிலாடுதுறை நகராட்சியில் பழுதான தார்சாலைகளை சீரமைப்பதற்கு 27.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|---|---|
| வருவாய் நிதி | | | | | |
| 1. | மயிலாடுதுறை நகராட்சி பகுதியில் சேதமடைந்துள்ள சாலைகளான 1. 097001R005 - வார்டு எண்.1இல் உள்ள ஆடியபிள்ளையார் கோவில் தெரு சாலை, 2. 097002R039- வார்டு எண்.2இல் உள்ள வடக்கு ஆராய தெரு தார் சாலை, 3. 097003R063 வார்டு எண்.3இல் உள்ள அம்பேத்கர் நகர் (துப்மை பணியாளர் காலனி) தார் சாலையினை, 4. 097004R059வார்டு எண்.4இல் உள்ள சேந்தங்குடி பெரிய தெரு (அக்ரஹாரம்) தார் சாலை, 5. 097007R141 வார்டு எண்.7இல் உள்ள மாருதி நகர் ராஜமாணிக்கம் சாலை, 6. 097009R203 வார்டு எண்.9இல் உள்ள காமராஜர் தெரு (முதல் தெரு) தார் சாலை, 7. 097010R207வார்டு எண்.10இல் உள்ள கல்லகுறிச்சி மாரியம்மன் கோவில் தெரு தார் சாலை, 8. 097010R210வார்டு எண்.10இல் உள்ள கருப்பன்ன சாமி கோவில் தெரு தார் சாலை, 9. 097015R346வார்டு எண்.15இல் உள்ள கல்லரை தோப்பு தெரு தார் சாலை, 10. 097019R093வார்டு எண்.19இல் உள்ள எல்.பி நகர் முதல் குறுக்கு தெரு தார் சாலை, 11. 097021R500 வார்டு எண்.21இல் உள்ள பர்மா காலனி சாலை மற்றும் பர்மா காலனி சந்து தார் சாலை, 12. 097022R482வார்டு எண்.22இல் உள்ள 3.நெ. புதுத்தெரு தார் சாலை, 13. 097024R350 வார்டு எண்.24இல் உள்ள சின்னக் கண்ணாரத் தெரு முதல் குறுக்கு தெரு தார்சாலை, 14. 097025R365வார்டு எண்.25இல் உள்ள ரேவதி நகர் தார் சாலை, 15. 097027R304வார்டு எண்.27இல் உள்ள தனியூர் தெரு தார் சாலை, 16. 097028R265வார்டு எண்.28இல் உள்ள சின்ன மனவெளி தெரு தார் சாலை, 17. 097028R224வார்டு எண்.28இல் உள்ள காவேரி நகர் தார் சாலை, 18. 097029R230 வார்டு எண்.29இல் உள்ள | 168.00/– | **M/s. SVS Engineering Contractor, Mayiladuthurai** | ரூ.13569204.70/– (-) 0.01 % குறைவு | **M/s. SVS Engineering Contractor, Mayiladuthurai** |
| | | | **M/s. BSR Engineering Contractor, Mayiladuthurai** | ரூ.13705310 /– (+) 1.00% அதிகம் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பனங்காட்டு தெரு தார் சாலை, 19. 097031R284வார்டு எண்.31இல் உள்ள 63வர் பேட்டை வடக்கு தெரு தார் சாலை, 20. 097032R292வார்டு எண்.32இல் உள்ள குருக்கல் பண்டாரத் தெரு தார் சாலை, 21. 097033R314வார்டு எண்.33இல் உள்ள பஞ்சுக்காரத் தெரு தார் சாலை, 22. 097036R424 வார்டு எண்.36இல் உள்ள தாமரை தெரு தார் சாலை, ஆகியவற்றை சீரமைக்கும் பணி பணி. | | | | |

அலுவலககுறிப்பு : பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று, இப்பணிக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்: 842/2023/இ1,

மன்றத் தீர்மானம் எண். 473. நாள்: 19.05.2023

அலுவலக குறிப்பு: அலுவலககுறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

22) மயிலாடுதுறை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் கீழ்கண்ட சாலைகளை சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ள 26.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| பொது நிதி | | | | | |
